ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1958/8 - 2016 මාර්තු මස 16 වැනි බදාදා - 2016.03.16
*1958/8 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 16 ஆந் திகதி புதன்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### (404 ஆவது அத்தியாயமான) உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி கட்டளைச் சட்டம்

(404 ஆவது அத்தியாயமான) உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் பிரிவு 11 இன் கீழ் உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி ஆணையாளர்களால் தயாரிக்கப்பட்டு அமைச்சர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட கட்டளைகள்.

உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி
ஆணையாளர்.

கொழும்பு,
2016, மாச்சு 16.

கட்டளை

2012 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 16 ஆந் திகதிய 1771/22 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் இறுதியாக திருத்தம் செய்து 1996 ஆம் ஆண்டு சனவரி மாதம் 10 ஆந் திகதிய 905/8 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட, 1995 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி (பல்வேறு) கட்டளைகள், கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு இத்தால் மேலும் திருத்தம் செய்யப்படுகின்றது.

(1) அதில் பதினொன்றாவது கட்டளையில் பந்தி (2) நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக கீழே குறிப்பிடப்படும் பந்தியை பதிலீடு செய்வதன் மூலம் :-

"(2) ஆணையாளர்களால் கட்டளை 10 இல், பந்தி (2) இல் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு கருத்திட்டத்தினதும் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியில் (80%) ஆன உச்சவெல்லை வரை கடன் வழங்கலாம்.

ஆயினும்,

(அ) இரண்டு மில்லியன் ரூபாவை விஞ்சாத அவ்வாறான ஏதேனும் கடன் தொகையை தலைவர் அவர்களின் பரிந்துரைக்கமைவாக ஆணையாளர்களாலும் ;

(ஆ) இரண்டு மில்லியன் ரூபாவை விஞ்சுகின்ற போதிலும், பத்து மில்லியன் ரூபாவை விஞ்சாத அவ்வாறான ஏதேனும் கடன் தொகையை ஆணையாளர்களாலும் ;

(இ) பத்து மில்லியன் ரூபாவை விஞ்சுகின்ற அவ்வாறான ஏதேனும் கடன் தொகையை, ஆணையாளர்களின் பரிந்துரைக்கமைவாக, உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம் என்ற விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் அவர்களின் முன்னங்கீகாரத்துடன் அளிக்கலாம்."

(2) அதில் கட்டளை 12 இல் "ஆணையாளர்கள்" என்ற சொல்லுக்கான வரைவிலக்கணத்திற்கு அதன் பின்னர் கீழே குறிப்பிடப்படும் வரைவிலக்கணத்தை உள்ளடக்கப்படுவதன் மூலமும் அதற்கான வரைவிலக்கணத்தை அகற்றுவதன் மூலமும் :-

"தலைவர்" என்ற சொற்பதம் கட்டளைச் சட்டத்தில் பிரிவு 2 இன் கீழ் நியமனம் செய்யப்பட்ட ஆணையாளர்களின் சபைத் தலைவர் எனப் பொருள்படும்.

4- 166


இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.